1982 பிப்ரவரி 15]

ஏழைகளுக்கு வழங்கப்படும் இலவச சட்ட உதவி

*வினா எண். 209— திரு. து. புருஷோத்தமன் திரு. எம். சின்னசாமி திருமதி த. இராசம்பாள்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.

Free legal aid என்ற அமைப்பின் மூலம் 1979-1980ம் ஆண்டில் எத்தனை ஏழைகளுக்குச் சட்ட ஆலோசனை வழங்கியுள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: ஏழைகளுக்கு இலவச சட்ட உதவி திட்டத்தின் கீழ் 1979-80 ஆம் ஆண்டில் 6,504 ஏழைகளுக்குச் சட்ட ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-40)

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஃப்ரீ லீகல் எய்ட் என்ற இந்த அமைப்பு இருப்பது எப்படியோ கிராமங்களிலே உள்ள ஏழை எளிய மக்களுக்கு இன்னும் தெரியாத நிலை இருக்கின்றது. ஆகவே இப்படி ஒரு அமைப்பு இருக்கின்றது என்றும் அதன்மூலம் ஏழைகள் சட்ட ஆலோசனை பெறலாம் என்றும் சினிமாவிலே சிலைடுகள் போடுவது போன்று சரியான விளம்பரங்கள் மூலம் மக்கள் எல்லாம் அறிகின்ற வகையிலே ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, தமிழ்நாடு சட்டஉதவி மற்றும் ஆலோசனைக் கழகம் 1977-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் வாரத்திலிருந்து செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற கரூர் தொகுதியிலிருந்தும் பல வழக்கறிஞர்கள் இதிலே சேர்ந்திருக்கிறார்கள். அங்கேயும் ஒரு கிளை இருக்கின்றது. இந்த அமைப்பிலே மொத்தம் 105 கிளைகள் இருக்கின்றன. இந்தத் திட்டம் பற்றி நன்கு விளம்பரபடுத்துவதன் மூலம் அதிகமாக மக்களுக்கு அதன் பலன் கிடைக்க வேண்டும் என்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தை ஏற்கிறேன். அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்துப்படி வானொலி மூலமும், பத்திரிகைள் மூலமும் இதுபற்றி அதிகமான அளவிலே பரப்பவேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர், பப்ளிக் ரிலேஷன்ஸ் ஆஃபிஸர் மற்றும் ஆங்காங்குள்ள செய்தி துறையின் மூலமாகவும் இதைப் பரப்ப வேண்டும் என்று அரசு கோரியுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இலவசச் சட்ட ஆலோசனைக் குழுவிலே யார் யார் இருககிறார்கள்?. மாவட்ட அளவிலும் தாலுக்காவிலும் ஆலோசனைகுழு இருக்கின்றதா? அவ்வாறு இருந்தால் யாரிடம் இதுகுறித்து அணுக வேண்டும் என்பதை விளக்குவார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, இலவசச் சட்ட ஆலோசனைக் குழுவினைப் பொறுத்தவரை ஆளுநர் அவர்களும், உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி அவர்களும், சட்டப் பொறுப்பிலே இருப்பதால் நானும் அதிலே இறுப்பினர்களாக இருக்கிறோம். ஆனால் அன்றாட நிர்வாகப் பணியை மேற்கொள்வதற்காக இரண்டு ஓய்வுபெற்ற நீதிபதிகளான மாண்புமிகு ராமகிருஷ்ணன், மாண்புமிகு கிருஷ்ணசாமி ரெட்டியார் ஆகியோர் இந்த குழுவினைக் கண்காணித்து வருகிறார்கள். ஏ பிரிவு, பி பிரிவு என்ற வகையிலே அதாவது சீனியர் அட்வகேட்ஸ் ஜூனியர் அட்வகேட்ஸ் என்ற வகையிலே இரண்டு பிரிவினர் மாவட்ட அளவிலும் வட்ட அளவிலும் அமைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தக் குழுவினர் இந்தப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

திரு. கு. பா. பழனியப்பன்: தலைவரவர்களே, இலவசச் சட்ட உதவி என்பது நல்ல பலனைக் தரக்கூடிய ஒரு திட்டம். தமிழ் நாடு கடன் நிவாரணச் சட்டங்களின்படி தாசில்தார் கோர்ட்டிலே ஏழை எளியவர்களுக்காக இந்த இலவச சட்ட உதவியின் மூலமாக வழக்கறிஞர்கள் ஆஜர் ஆகலாம் என்ற அனுமதியை வழங்கிட அரசு தயாராக இருக்கின்றதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, அனுமதி வழங்காவிட்டாலும் கூட விதியின்படி they can have their own representatives, though not an Adtvocated ஆனால் அட்வகேட் வேண்டாம் என்று சொன்னதற்குக் காரணம் பல கட்டங்களில் ஏழைகளுக்கு அது ஒரு பளுவாகக் கூட ஆகிவிட்டது. என்பது அரசுக்கு வந்த காரணத்தால் இதுபோன்று ஏழைகளுக்கு வழக்கறிஞர்கள் வேண்டாம் என்று முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல் இலவச சட்ட ஆலோசனைக் குழுவின் மூலமாக அவர்களுக்கும் பரிகாரம் வேண்டும் என்றும் இதை அவர்கள் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள்,